344

17 JUL 1931

Registered No. M. 2445.

உ
சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கோடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற்
கழகத்தினின்றுவரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கிலஆண்டு புரட்டாசித்திங்கள் 1929—செப்டம்பர். | இதழ் ௬

க. ஸ்ரீபசவேச விஜயம் :—

உ. வீரசைவ மதமும் அதன் புகழ்தற்குரிய நிலைபேறும் :—

௩. தீக்ஷை :—

௪. ஆசாரமே ஆரோக்கிய சாதனம் :—

௫. அட்டாவரணம் :—

௬. வீரசைவவிசேட இலக்கணம் :—

எ. வீரசைவப் பெரியார்கட்கோர் வேண்டுகோள் :—

அ வடநாட்டு நிகழ்ச்சிகள் :—

௯. அபிஷேகமாலையுரை :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரையர், 'வீரசைவநிலையம்' முசிரி, திருச்சி ஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

— தமிழ் நாட்டு —

வீரசைவ சித்தாந்த மகா சங்கத்தின் பொறுப்பாளர்கட்கும் உறுப்பினர்கட்கும் அறிவித்துக்கொள்வது :—

பெரியோர்களே ! நமது மகா சங்கத்தின் ஆறாவது பெருங் கூட்டம் இந்த ஆண்டில் பொம்மபுரத்து மடாலயத்தின்கண் செவ்வனே நடைபெற்றதெனப் பலரும் அறிவர். இவ்வாண்டில் நமது சங்கத்திற்குப் பொருட் செலவு நேராதபடியும், நிறைவேற்றற் கழகத்தார்க்குச் சிரமமின்றியும் இப்பொழுது பட்டததிலமர்ந்திருக்கும் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் மகா சந்நிதானம் மடாலயத்தின் செலவிலேயே நடத்திவைத்திருக்கிறார்களென்பதும் நினைவுகூர்ந்து பாராட்டத்தக்கது. விரைவில் குறிப்பிட்டபடியாலும், விடுமுறை காலமல்லாததாலும் பொறுப்பாளர்கள் வழக்கப்படி உறுப்பினர்களிடத்துச் சந்தாத் தொகையை வசூலிக்க நேராமற்போயிற்று. ஆனால் உறுப்பினர்களும் பொறுப்பாளர்களும் இவ்வருடத்தில் சந்தாத் தொகையை வசூலிப்பதில்லையோ எனச் சந்தேகிக்கவேண்டா. ஒவ்வோராண்டிலும் சங்கம் நடைபெற்றாலும் பெறாவிட்டாலும் வேறு செலவில் நடைபெற்றாலும் உறுப்பினர்கள் வருடம் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் மகா சங்கத்திற்குக் கொடுத்துவரவேண்டுமென முன்னமே தீர்மானமாயிருக்கின்றதல்லவா ? இப்பொழுது மகா சங்கத்திற்கு சுமார் 250 உறுப்பினர்சளிருந்தபோதிலும் வருடந்தோறும் சந்தாவைச் செலுத்திவரின் சிறிது சிறிதாக மூலதனந் தொகுப்பதற்கும் சாதகமாகலாம். முன்னரே மடத்தில் கொடுத்துவைத்திருந்த சங்கத்தின் பணமும் கையிருப்பிலிருக்கின்றது இந்தவருடத்திய பணத்தையும்தொகுத்தால் அடுத்தவாண்டில்இலகுவில்நடத்தவும் மூலதனம்மீத்துவைக்கவும் அனுகூலமாகும் என்பது ஞாபகத்தில் வைக்கத்தக்கது. இப்பொழுது நமது வீரசைவத்தின் வாயிலாகப் பல பக்கங்களில் வீரசைவர்களிருப்பதாக அறிகின்றோமாதலால் அவர்களும் உறுப்பினர்களாகச் சேர முயன்றால் பெரிதும் நலம் பயக்கும். வரவு செலவு இருப்புத் திட்டத்தை இப்பத்திரிகையிலேயே வெளியிடக் கருதியிருப்பதால் பொறுப்பாளர்களனைவரும் இந்த வருடத்தின் சந்தாவையும் பழய நிலுவையுடன் இப்பொழுது தொடங்கியே வசூலித்தல் வேண்டும். உறுப்பினர்களும் பொறுப்பாளர்களிடம் வருத்தமின்றிச் சந்தாவைக்கொடுத்துதவல்வேண்டும். சமூக சேவை செய்வோர்க்கு எதுவும் சுலபமும் இன்பமுமல்லவா ? பொறுப்பாளர்களும் கனம் தங்கிய பொறுப்பை மேற்கொள்ளவேண்டுமென வேண்டுகின்றேன்.

இங்ஙனம், தொண்டன், த. காரியதரிசி.

17 JUL 1931

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால்
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றக் கழகத்தினின்று
வரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கிலஆண்டு புரட்டாசித்திங்கள் 1929—செப்டம்பர். | இதழ் ௬

ஸ்ரீபசவேச விஜயம்.

திருவாளர் G. C. வீரப்பா B.A., L.L.B, அவர்கள்.

(முன் தொடர்ச்சி.)

குணம்பெறு பசவர் குருபதமடைதல்.

மாதரசர் தம்புதல்வரது உபநயனத்திற்குவேண்டிய காரியங்களை ஊக்கத்துடன் நோக்கிவந்தனர். உபநயன அழைப்புப் பத்திரிகைகள் உறவினர் முதலியோர்க்கனுப்பலாயின. குறிப்பிட்ட நன்னாளில் உற்றார் முதலிய யாரும் திரண்டு வரலாயினர். தாய் தந்தையரிருவரும் தம்மில்லத்திற்கு வருவாரை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும் ஆழ்ந்த கருத்துடையராயிருந்தனர். மாதரசர் நன்மதிப்புடையராயிருந்தமையின் நகரவாசிகளும் பெருமகிழ்வுடன் எதிர்பார்த்திருந்தனர்.

பசவேசரது மனமோ ஒருநிலைப்படாது பாவிடையாடு குழல்போல் அகச் சான்றின்படி நடப்பதா? அல்லது பெற்றோரது மனப்பான்மையின்படி நடப்பதா என்று இருபால் அலைவுற்றது. ஏனையோர் செய்யும் ஆடம்பரங்களெல்லாம் அவர்க்கு அருவருப்பைத் தந்தன. ஒன்றுமறியாது விளையாடும் பருவத்தில் முதியவர்க்குரிய ஆராய்ச்சியில் அவரது உள்ளம் ஊன்றி நிற்குமாயின் உடல் எந்த நிலைமையிலிருக்கும் என்பதைக் கருதுங்கள்! உடலும் மனமுமிளைத்த நம் பசவேசர் பிறந்தபொழுதே இலிங்கதாரணஞ் செய்திருக்க அதனை விடுவது அறமுமன்று; ஆண்மையுமன்று எனத் துணிந்தெழுந்து ஒருவருமறியாது வெளிப்போந்து கூடலசங்கமேசர்

ஆலயத்தையடைந்து அங்கெழுந்தருளியிருந்த அருள் வடிவாகிய ஜோதி முனிவர் சரணத்தை யடைந்தார்.

மாதரசரது மனையின்கண் பலர் குழுமியிருந்தனர். வாச்சியங்கள் முழங்கின. வைதீகக் கிரியைகட்குரிய பொருள்கள் தொகுக்கலாயின. குறிப்பிட்ட இலக்கினமும் நெருங்கியது. புரோகிதர் சிறுவர்க்குத் திருமஞ்சனமாட்டுதல் முதலியன செய்விக்கக் கட்டளையிட்டனர். அங்கிருந்த பணியாட்களில் சிலர் நீராட்டுதற்குரிய தொழின் முறையில் முற்பட்டனர். சிலர் பசவேசரை அழைத்துவர அவரது அறைக்குச் சென்றனர். அவரை அங்குக் காணப்பெறாமையால் துறுவித் துறுவித் தேடலாயினர். எங்குங் காணாமையால் பெற்றோர்க்கறிவித்தனர். பெற்றோர் முதலியவர் மேற்கொண்ட காரியங்களையெல்லாம் விடுத்துத் திடுக்கிட்டோடி அவர் விளையாடும் உய்யானம் இளமரக்கா முதலிய இடங்களில் தேடலாயினர். தேடியயரும் நிலைமையில் வழிப்போக்கனொருவன் அறிவிக்க அறிந்து சங்கமேசராலயம்புக்கு அங்கோர்பால் உலகியலை மறந்து உயர்ந்ததோர் ஆராய்ச்சியிற் கருத்தைச் செலுத்திக் கவலையுடனிருக்கும் நம் பசவேசரைக் கண்டனர். தம்முடன் யாதும்உரையாடாதிருந்த அச்சிறுவரை தம்மில்லத்திற்கு வரும்படி யழைத்தனர்.

பசவேசர் பெற்றோரை நோக்கி உம்முடைய பற்றனைத்தையும் இன்றே விடலாயினேன். மீட்டும் உமதில்லத்திற்கு வருவதற் கிசையேன். எனக்குப் பிறந்தபொழுதே இலிங்கதாரணமாயிருக்க அதனையும் அதன் பெருமையையும் கெடுக்க இப்பொழுது நீங்கள் முயல்கின்றீர்கள். நான் பெற்றோரென மரியாதை பாராட்டி எவ்வளவோ வினயமாகக் கேட்டுக்கொண்டும் நீங்கள் என் வேண்டுகோளையும் கருத்தையும் சிறிதுங்கவனியாது மனச்சான்றுக்கு மாறான கொள்கையில் தலையிடலாயினீர். யான் கூறுவது உங்கள் கருத்துக்கிசைந்ததாயினும் உங்கள் மனப்போக்கும் ஆடம்பரங்களும் உற்றாரது பழக்க வழக்கங்களுக்கு இசைவனவாயின. ஆதலின் யான் இங்கு வந்து குருவின் பாதத்தை அடையலாயினேன். இனி அங்கு வருதற்குடன்படேன். என்னைக்கட்டாயப்படுத்தாது என்னிட்டப்படி விடுவதே உங்கள் பெருந்தன்மையெனக் கண்களில் நீர் சொரியக் கசிந்து பெற்றோரது பாதத்தில் வீழ்ந்து வணங்கிக் கேட்டுக்கொண்டனர். பெற்றோர் முதலியோரும் அவரது துயரத்தைக் கண்டு பொறுதவராகி மனங்கரைந்து கடவுளாணை எப்படியிருக்கிறதோ

அப்படியே நடக்கட்டும். நாம் அதனை மீறி என்னதான் செய்ய முடியும்? என்று அயர்ந்து தாங்கொண்ட கொள்கையை விடுத்து அவர் கருத்துக்கு இணங்கலாயினர். உபநயனச் சடங்கியற்ற ஆவலுடன் வந்திருந்த வேதியரனைவரும் அல்லலுடன் மருண்டேகலாயினர். உண்மையறிவுடையார் பலர் எதிர்கால நிகழ்ச்சியைப் பேராவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

கல்விப் பயிற்சியும் கருதிய தானமும்.

நம் பசவேசர் இளமைப் பருவத்திலேயே கலையனைத்தையும் ஓதாதுணரும் கருவிலே திருவுடையாராயினும் உலகியலுக்கேற்ப நன்குணர்ந்து ஓர் ஆசிரியர்பால் கல்விபயிலத் தொடங்கினர். உழுது பண்பட்ட வளமுடையதோர் நிலத்தில் நாட்டிய விதை ஒன்றாயினும் அது முளைத்து வளர்ந்து பல கிளையாகப் பெருகி நூற்றுக் கணக்கான வித்துக்களை விளைவிப்பதுபோல ஆசிரியர் கற்பிப்பது ஒன்றாயினும் பன்மடங்காகக் காட்டி மகிழ்விக்கும் ஆற்றலுடையராயினர். சங்கமேசராலயம் பிரசித்திபெற்றது. அங்குக் கடவுள் வழிப்பாட்டிற்குப் பலர் வருவதுண்டு. வருவோர்க்கு இளந்துறவியாகிய பசவேசரது காட்சியும் பேரன்பை விளைவித்தது. பசவேசர் காண்போரது கண்கவர் வனப்புடையராய்க் கருணையே உருக்கொண்டாற் போலிருந்து மலர்ந்த முகத்துடன் இன் சொல்லே பேசி யாருக்கும் இன்பத்தை விளைவிப்பர். தம்பால் வருவோர் அரசரேயாயினும் சேவகரேயாயினும் அன்னாரை ஒத்த பேரன்புடன் நோக்குவர். இத்தகைய இவரது நற்குண நற்செய்கையினாலாய புகழ் உலகமெங்கும் பரவிற்று. கடவுள் வழிபாட்டிற்கு வருவோர் யாவரும் இவரைக் காணுமற்போகார்.

'பல்வகைத் தானத்தினும் அன்னதானமே சிறந்தது. அதினுங் கல்வித்தானமே சிறந்தது. அன்னங்கொடுக்கில் உண்ட சிறிது பொழுதில் அழியும். அவ்வன்னத்தால் வளர்க்கப்படும் உடலும் அழிவுபடும். கல்வியோ என்றும் அழிவுபடாது. அதனால் வளர்க்கப்படும் அறிவும் ஆன்மாவோடு ஒன்றிநின்று எழுமையும் ஏமாப்பைத்தரும். அதனால் சாந்துணையுங் கற்றலும்வேண்டும். கற்றதைப் பிறர்க்குத் தானஞ்செய்தலும்வேண்டும் என்ற எண்ணம் அவருள்ளத்தில் வேரூன்றலாயிற்று. அதனால் தம்மாலியன்றவரை இளமைப்பருவத்திலேயே கல்வி தானஞ்செய்யும் முயற்சியில் முன்வரலா

யினர். அவர் கண்பொழுதாயினும் வீண்பொழுதாகக் கழிக்க மன மிசையார். ஆசிரியர் இளைப்பாறும்போதெல்லாம் ஆற்றங்கரைக்குப் போய்வருவதுவழக்கம்.

அவர் நாள்தோறும் வைகறையில் எழுந்து ஆசிரியர்பால் கற்ற புதியபாடங்களை முதலிலும், பழம்பாடங்களைப் பின்னருஞ் சிந்திப் பார். விடிந்தவுடன் சூரியன் உதிக்குமுன்னரே வெளியிற்சென்று காலைக்கடன்களைமுடித்துக்கொண்டு நீராடித் திருநீறணிந்துகொண்டு ஆலயத்தையடுத்த நந்தனவனத்தையடைந்து அன்றலர்ந்த நறுமண முள்ள மலர்களை யெடுத்துப் பூங்கூடையில் நிரப்பிவந்து இண்டை, தொடையல் முதலிய மாலைகளைத் தொடுத்து, கூடலசங்கமேசராலயத் திற்கொடுத்து, ஆசிரியர்க்கென எடுத்துவைத்த பகுதிபோக எஞ்சிய மலரைக்கொண்டு தமது சிவபூசையை முடித்துக்கொண்டு ஆசிரியரி டஞ்சென்று அவரது காட்சிக்குக்காத்திருந்து வந்தபின்னர் மலர்க் கூடையைக்கொடுத்து வழிபட்டு நிற்பர். ஆசிரியர் நீராடுதல் முதலி யன செய்யும்பொழுதெல்லாம் அவ்வப்பொழுது வேண்டிய தொண்டு களைப் பணிவுடன் செய்துகொண்டிருப்பர். ஆசிரியர் சிவபூசைசெய் வதற்கு இரண்டொருமணிநேரஞ்செல்லும். அப்பொழுதுதான் பச வேசர் தம் பாடங்களைப்படித்துச் சித்தஞ்செய்துகொள்வர் ஆசிரியர் சிவபூசையை முடித்துக்கொண்டுவந்து தமது ஆசனத்தில் அமர்வர். பசவேசர் ஆசிரியர் திருவடிக்கண்சரணஞ்செய்து இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப் பருகுவோன் அன்ன அன்புடையராகிப் பாடங்களைக் கேட்டு உள்ளத்தமைத்துக்கொள்வர். ஆசிரியர் உண்ட விளைப்பை ஆற்றிக்கொள்ளச் சிறிது உறங்கச்செல்வர்.

இப்பொழுதுதான் நமது இளைஞர் தாம் கருதியதானத்தைச் செய்யமுற்படுவர். உண்டபின்னர் சிறிதும் தாமதியாது ஆற்றங் கரைக்குச்செல்வர். அங்கு மரநிழலில் பசுக்களும் எருமைகளும் வயி றார மேய்ந்து தண்ணீர்குடித்து வந்து படுத்து அசைபோட்டு இளைப் பாறிக்கொண்டிருக்கும். அவற்றை மேய்க்கும் ஏழைமக்களாகிய சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருப்பார்கள். பசவேசர் அச்சிறுவர் களையெல்லாம் இன்சொல்லால் அழைத்து மணல்பரந்த ஓர் மரநிழற் கண் கூட்டிச்செல்வர். அச்சிறுவர்களுக்கு முதலில் எழுத்துக்களை உச்சரிக்கக் கற்றுக்கொடுப்பர். பின்னர் மணலில் எழுதக்கற்பிப்பர். இவ்வாறே நாளடைவில் விளையாட்டாகவே எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்துவிடுவர். சிறுவர்களும் உல்லாசமாகவே கற்றுக்கொள்வர்.

வீரசைவ மதமும் அதன் புகழ்தற்குரிய நிஸபேறும்.

(ஸ்ரீமத் குருசாந்த சாஸ்திரிகள், ஹிரேமடம்.)

இவ்வுலகத்தின்கண் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளாகிய சிவ பெருமானால் தாபிக்கப்பெற்ற வீரசைவ மதமானது அநாதியாகப் பெருமை வாய்ந்துள்ளது என்பதற்கு இந்த வுலகமே சான்ருகக் காணப்படுகின்றது. எங்ஙனமெனில், உலகப்படைப்பின் தொடக்கத்தில் பரமேசுவரன் பிரமனுக்குப் படைப்புத் தொழிலைத் தொடங்குக வெனக் கட்டளையிட்டனர். பிரமன் படைக்குந் தொழிலையறியாது முன்னர் படைத்துக் காட்டினுல் பின்னர் அதன்படி செய்வேனென இறைவனை வேண்டிக்கொண்டனன். வேண்டிக்கொண்டவாறே சிவ பெருமானும் தமது பஞ்ச முகங்களினின்றும் ஐந்து ஆசாரியர்களைத் தோற்றுவித்து அந்த பஞ்சாசாரியர்களால் சத்தி விசிஷ்டாத்வைதாதி வீரசைவ மதத்தை நிலைபெறச் செய்தாரென வேதாகமங்களனைத்தும் எடுத்து விளங்கக் கூறுவது வெளிப்படை. படைப்புத் தொழிலை யறியாத அயன் "யதாவீரசைவ மதோத்பத்தி: ததாஜகதுத்பத்தி:" என்றபடி எப்பொழுது வீரசைவ மதம் உற்பத்தியாயிற்ருே அப்பொழுதே உலகத்தைப் படைத்தான் என்பது கீழ்க்கண்டவற்ருல் உறுதியாகின்றது.

இந்த வீரசைவ மதத்திற்கு இரேணுகர், தாருகர். ஏகோராமர், பண்டிதர், விசுவாராத்தியர் என்ற பஞ்சாசாரியர்களே தலைவர்கள். இவ்வுலகத்திற்கும் பிரமா, விஷ்ணு, உருத்திரன், ஈசுவரன் சதாசிவன் என்ற பஞ்சப் பிரமர்களே தலைவராகின்ருர்கள். இந்த மதம் பட்விடி. விருஷ்டி, லம்பனம், முக்தாகுச்சம், பஞ்சவர்ணங்களென்ற பஞ்ச மகா சூத்திரங்களினுல் உயர்ந்ததாகின்றது. இவ்வுலகமும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சமகாபூதங்களினுல் உயர்ந்ததாகின்றது. வீரசைவ மதம் குரு, லிங்கம், சங்கமம், விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்ஷரம், பாதோதகம், பிரசாதம் என்னும் அட்டாவரணங்களால் காக்கப்பெறுகின்றது. இவ்வுலகமும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆத்மா, ஞாயிறு, திங்கள் என்னும் எண்வகைத் தத்துவங்களினுல் காக்கப்படுகின்றது. சிவபெருமானுடைய உருவ

மும் இந்த எண் வகைத் தத்துவங்களின் கூட்டுறவாகின்றது. வீர சைவமதம் ஒவ்வொரு பொருளினும் ஐவைந்து தத்துவங்களை அடக்கிக்கொண்டிருக்கின்றது என்பது கீழ்க்கண்டவற்றால் விளக்கமாகும்.

சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருடம், ஈசானம், என்பன சிவபிரானுடைய ஐந்து முகங்கள். அந்த ஐந்து முகத்தினின்றும் அவதரித்தவராகிய இரேணுகர், தாருகர், ஏகோராமர், பண்டிதர், விசுவாராத்தியர் என்பார் பஞ்சாசாரியர். பட்விடி, விருஷ்டி, லம்பனம், முக்தாகுச்சம், பஞ்சவர்ணம் என்பன பஞ்சசூத்திரங்கள். வீரர், நந்தி, பிருங்கி, விருஷபர், கந்தர் என்பவர் பஞ்சகோத்திர புருடர்கள். பீடம், விருத்தம், கோளகம், சிரம், கோமுகம் என்னும் ஐந்து சூத்திரங்களையுடையது இலிங்கம். கந்தா, கௌபீனம், கமண்டலம், தண்டம், பஸ்மகுடிகம் என்னும் பஞ்ச முத்திரைகளுடன்கூடியவர் குருமூர்த்தி. நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதம் என்பன ஐங்கலைகள். பஞ்ச கலைகளின்றுந்தோன்றிய நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை, என்பன ஐந்து பசுக்கள். இந்த ஐவகைப் பசுவின் கோமயத்தால் உண்டாயவை ஐவகை விபூதிகள். கிரகணம், கபளனம், சோஷணம், தகனம், சோதனம் என்னும் பஞ்ச கிருத்தியங்களே பஞ்சமுக ருத்திராக்கங்கள்.

பிரசாத பஞ்சாக்கரம், மகா பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், தூலபஞ்சாக்கரம், மூலபஞ்சாக்கரம் என்பன பஞ்சாக்கர மந்திரங்கள். இலிங்காசாரம், சதாசாரம், ப்ருத்தியாசாரம் சிவாசாரம், கணசாரம் என்பன பஞ்சாசாரங்கள். இன்னும் உலகத்தின் ஆராய்ச்சியிலும் ஒவ்வொரு பொருளினும் ஐந்து தத்துவங்களுடன் கூடின வீர சைவமத வுண்மைகளே அமைந்திருக்கின்றன என்பது கீழ்க்கண்டவற்றால் விளங்கும்.

பரப்பிரமம் சத்து, சித்து, ஆனந்தம் நித்தியம், பரிபூரணம் என்னும் ஐந்திலக்கணங்களையுடையது. சிருட்டி, திதி, லயம், திரோதானம், அனுக்கிரகம் என்பன பஞ்சகிருத்தியங்கள். தபம், கருமம், சபம், தியானம், ஞானம் என்பன பஞ்சக் கிரியைகள். மந்திரம், அடம், இராஜம், இலயம் சிவயோகம் என்பன ஐவகை யோகங்கள். ஞானம், ரக்ஷை, தபசு, சர்வசம்வாதம், துக்கசம்க்ஷயம், சுகாவிர்ப்ரயம் என்பன ஐவகைப் பிரயோசனங்கள். சர்மி, முமுக்ஷு, அப்

யாசி, அனுபவி, ஆரூடர் என்பார் ஐந்து அதிகாரிகள். லௌகிகம், வைதீகம், ஆதியாத்மீகம், ஆதிமார்க்கிகம், மந்திரம் என்பன பஞ்ச சாஸ்திரங்கள். தமசு. மாயா, மோகம், அவித்தை, அநிருதாத்மீகம் என்பன பஞ்ச மாயைகள். அசத்து, சடம், துக்கம், அநித்தியம், கண்டிதம் என்பன மாயையின் பஞ்ச விலக்கணங்கள். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன பஞ்சாவத்தைகள். அவித்தை, அஸ்மிதம், ராகம், த்வேஷம், அபினிவேசம் என்பன பஞ்ச கிலேசங்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் என்பன வைந்தும் அந்தக்கரணங்கள். வியானன், சமானன், உதானன், பிராணன், அபானன் என்பன பஞ்சப்பிராணங்கள். அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்பன பஞ்ச கோசங்கள். சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, ஜிஹ்வா, கிராணம் என்பன பஞ்சேந்திரியங்கள் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் ஐந்தும் கருமேந்திரியங்கள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன ஐந்து விடயங்கள். பீதம், ஸ்வேதம், ரக்தம், ஹரிதம், நீலம்என்பன பஞ்சவர்ணங்கள். விசேஷணம், விசேஷியம், கர்த்திரு, கர்மம், கிரியை என்பன பஞ்ச அன்வயங்கள் மந்தாரம், பாரிஜாதம், சந்தானம், கல்பம், அரிச்சந்தானம் என்பன பஞ்சகல்பவிருக்ஷங்கள். திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், சரணங்களென்பன பஞ்சாங்கள்கள். இவைமுதலான பற்பல பொருள்களினூற்கூடிய உலகமும் சத்தி விசிஷ்டாத்வைதாதி வீரசைவ மதமும் ஐவகைத் தத்துவப்பொருள்களால் உண்டாயிருக்கின்ற காரணத்தால் "யதாவீரசைவமதோத்பத்தி: ததாஜகதுத்பத்தி:" என்பது சித்தாந்தமாயிற்று.

வித்தின்கண் மரம் எப்படி அடங்கியிருக்கின்றதோ அப்படியே பரப்பிரமரூபமாகிய இஷ்டலிங்கத்தின்கண் உலகமனைத்தும் அடங்கியிருக்கின்றது. வித்தானது பஞ்சபூதங்களின் சேர்க்கையடைந்தவுடன் கடினத் தன்மைநீங்கி மென்மைத் தன்மையையடைந்து முளைத்து உருவத்தின் முடிபை (விளைவை) அடைய மேலோங்கிச் சென்று பெருங்கிளை உட்கிளை (சாகோபசாகை) களுடன்கூடி அரும்பு மலர் காய் கனிகளாகி முதலில் தான் எந்த வித்தின் வடிவமாயிருந்ததோ அந்த வித்தின் வடிவத்தைத் தலையின்மேல் தரித்துக்கொண்டதன் மேல் உருவத்தின் முடிபையடையுந் தொழில் நின்றது. அவ்வாறே பிராணிகளில் எவனொருவன், புழு, பூச்சி, பறவை மிருகம் முதலிய

எண்ணிறந்த பிறவியை யடைந்ததன் (உருவத்தின் முடிபையடைந்த தன்) பின் மக்கட் பிறப்பிற்கு வந்து வித்தின் வடிவாகிய இஷ்டலிங் கத்தைத் தாரணஞ்செய்துகொண்டதன்மேல் உருவத்தின் முடிபை யடையும் (பிறவியைக் கடத்தல்) வினை முற்றுப்பெற்று மீண்டும் பிற வியை யடையாமலேயே பரப்பிரம்மமாகிய லிங்கசொரூபத்தை யடை ந்துவிடுவன். அதனால் இந்த வீரசைவ மதம் அநாதியாக நிலைபெற் றுள்ளதென்பதற்கு இந்தப் படைப்பே சான்றாகின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த வீரசைவ மதத்தின் உண்மையை அறியாமலேயே கலியின் ஆட்சிக்குட்பட்ட சில அறிவிலிகள் இழித்துக்கூறி நரகத்தி விழிந்து இடர்ப்பட்டொழியுந் தன்மையராகின்றனர். அன்பு நிரம்பிய அறிவுடையோர்களே! இத்தகைய தூய்மையான வீரசைவ மதத் தைக் கடைபிடித்து உண்மைத் தொண்டாற்றி உய்வீர்களென நம்பு கின்றேன். சுபம்.

தீக்ஷை.

(ஸ்ரீமத் சிரசி, குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.)

ஜிஹ்வாசா பலசம்யுக்தஸ் சிவசம்ஸ்கார வர்ஜித:
சிவநிர்மால்ய போகீசி த்ரௌரவம் நரகம் வ்ரஜீத்.

எந்த மனிதன் தீக்ஷாசமஸ்காரத்தை யடையாமல் நாவின் இச்சை யால் சிவப்பிரசாதத்தை உண்கின்றானோ அவன் நரகத்தையடைவான் என்ற சித்தாந்த வாக்கியத்தினால் தீக்ஷா சமஸ்காரமில்லாதவன் சிவப் பிரசாதத்தைப் பெறுதற்கு யோக்யனாகான். சிவப்பிரசாதியாகாத பொழுது முத்திகிடைப்பதின்று. உலகத்தில் ஓர் பாடசாலையில் படிக்கவேண்டுமென்ற இச்சையுள்ள மாணவனொருவன் முதலில் பிர வேச பரீக்ஷையில் தேறுதல்வேண்டும். தேர்ச்சிபெறாவிட்டால் அப் பாடசாலையின்கண் படித்து உயர்ந்தநிலையடைதல் முடிவதின்று. அதுபோல, இந்தத் தூய்மையான வீரசைவ மதத்தைக் கைக்கொண்டு இந்த மதத்தின் முத்தி சாதனங்களாகிய குரு லிங்க சங்கம பாதோத கப்பிரசாத மந்திர உருத்திராக்ஷ விபூதிகளென்ற அட்டாவரணங் களின் உண்மையை யறிந்து தானும் தகுதியுடையனாகவேண்டுமானால் முதற்கண் சிவதீக்ஷையே பிரவேச பரீக்ஷையாயிருக்கின்றது. இத் தகை பரீக்ஷையில்லாதவனுக்கு இலிங்கதாரணமில்லை. இலிங்கதா

ரணமில்லாதவன் வீரசைவனுகான். வீரசைவனுகாதவன் அட்டாவரணங்களுக்கே உரியவனுகான். அட்டாவரணமில்லாதவனுக்கு சடுத்தலாதிகாரமில்லை. சடுத்தலாதிகாரமில்லாதவனுக்கு வீரசைவ சித்தாந்தப்பிரகாரம் முத்தி கிடைப்பதின்று. இப்படி முதல் முதலில் முத்தி சாதகமாகிய சிவதீக்ஷையை எவர் அடையவில்லையோ அவர்க்கு வீரசைவத்துவம் சித்திப்பது இல்லை. அத்தகைய தீக்ஷா சமஸ்காரம் இல்லாதவராகிப் பிராகிருதசீவர்களா யிருந்துகொண்டு தாம் வீரசைவர் என்று பெயரளவில் சொல்லிக்கொண்டிருத்தலினுல் நெய்ப் பீர்க்கங்காயில் நெய் இல்லாவிட்டாலும் எப்படி நெய்ப்பீர்க்கங்காய் என்று சொல்லிக்கொள்ளுகின்றூர்களோ அப்படியே இதுவும் ஒரு ரூடநாம (இடுகுறிப்பெயர்) மாகின்றதேயன்றி அந்வர்த்தநாமமென்று (காரணப்பெயரென்று) எண்ணப்படாது. உபநயன சமஸ்காரமில்லாதவன்பிராமணனிடத்தில் பிறந்தானுயினும் அவனுக்குப்பிராமணத்துவம் எப்படிச் சித்திக்காதோ அப்படியே தீக்ஷா சமஸ்காரமில்லாதவன் எவ்வகையிலும் வீரசைவனென்று கருதப்படான். அதனுல் வீரசைவனென்று சொல்லிக்கொள்ள விருப்பமுடையவன் தன்னுடைய கோத்திர குருவினுல் தனது வருணத்திற்கிணங்கியபடி சமஸ்காரத்தையடைந்து குருவினுல் உபதேசத்தைப் பெற்று குருவினுல் கொடுக்கப்பெற்ற இஷ்டலிங்கத்தைத் தரித்துக் குருவினுடைய ஆணைப்படி எல்லாவித கருமங்களையும் அனுட்டித்தல் வேண்டும்.

தீயதேஹி சிவஜ்ஞானம் க்ஷீயதே பாசபந்தனம்,
யஸ்மாத்தஸ்ஸமாக்யாதா தீக்ஷேதீயம் விசக்ஷணை:

என்று சித்தாந்த தீபிகையில் கூறுகிறபடி சிவஞானத்தை உண்டாக்கி பாசபந்தத்தை நாசஞ் செய்வதே தீக்ஷையெனப்படும். வீரசைவ மதப்பிரவேச சாதகமாகிய இத்தகைய தீக்ஷையானது **"வேதாரூபா க்ரியாரூபா மந்திரரூபாச தாபச "** என்ற சித்தாந்த சிகாமணியின் கருத்தின்படி தீக்ஷை வேத தீக்ஷை, கிரியா தீக்ஷை, மந்திர தீக்ஷை, என மூவகைப்படும். குருவானவர் சீடனைக் கருணைவடிவான திருக்கண்ணுல் நோக்கி மஸ்தகத்தில் அஸ்தத்தைவைத்து சிவகலையை நிலைபெறச் செய்வதே வேத தீக்ஷை. சீடனுடைய வலக்காதில் திவ்விய மந்திரத்தை உபதேசஞ் செய்வதே மந்திர தீக்ஷை. குண்ட மண்டபாதிகளை அலங்கரித்து மதத்தாபகராகிய ஸ்ரீஇரேணுகாதி பஞ்சாசாரியர்களுடைய பஞ்ச கலசங்களைத் தாபித்து அந்தந்த மந்திரங்களினுல்

ஆசாரியர்களை ஆவாகனஞ் செய்து அவர்களுடைய சானித்தியத்தால் அந்தந்த கோத்திர குருவினல் செய்யப்பெறும் இலிங்க சமஸ்காரம் அங்க சமஸ்காரங்களே கிரியா தீக்ஷையெனப் பெறும். இத்தகைய மூவகை தீக்ஷையைப்பெற்ற சீடனது இதயத்தில் முன்னிருந்த மாமிசபிண்டத்தின் சம்மந்தமான தோடங்களனைத்தும் போக, மந்திரபிண்ட சம்பந்தமான குணங்கள் தோற்றமாகின்றன.

இப்படிப்பட்ட வீரசைவ மதத்தின் முதல் சோபானமென்னும் சிவதீக்ஷையைப் பலர் அடையாமலேயே ஈனசமஸ்காரராகி உணவாதிகளில் நியமமின்றி சுயேச்சாவிகாரிகளாயிருக்கின்றனர். இப்படிப்பட்ட நியமமில்லாதவரை ஆசாரிய பீடத்திலிருக்கும் குருமார் தம்மிடத்தில் சமத்துவ நிலையில் வைத்துக்கொள்வதனல் மிகுதியான தீங்குகளேயன்றி வேறின்று. ஈன சமஸ்காரிகளுடைய (தீக்ஷையில்லாதவர்) சம்பந்தத்தினல் அவரது ஜபதப அனுட்டானதிகளெல்லாம் நசித்துப்போகின்றன. **"ஸ்வமார்க்காசார வர்த்திப்ய ஸ்ஸகவாஸம் சமாசரேத்"** என்னும் சித்தாந்தத்தின்படி யார் தன்னைப் போல் சமஸ்காரமுடையராயிருக்கின்றனரோ அவருடன் வியவகரித்தலும், அவரது மனையில் உண்பதுமே வீரசைவ பரமதர்மமாயிருக்கின்றதால் சமஸ்காரமுடையோர் சமஸ்காரமில்லாதவனுடைய மனையில் உண்பதினல் இவர் எவ்வளவு சாத்வீக சுபாவத்தையுடையராயிருப்பினும் அந்த தாமச சம்பந்தத்தினல் சாத்வீக சுபாவமனைத்தும் நஷ்டமாகின்றன. அதனற்றான் **"யஜமானக்கிருதம் பாபம் அன்னமா ஷ்ரித்யதிஷ்டதி:"** என்ற வாக்கியம் இந்த அர்த்தத்தையே ஞாபகப்படுத்துகின்றது. இதற்கு உலகத்தில் பல இதிகாசங்கள் உதாரணமாக வழங்குகின்றன. சிவதீக்ஷையில்லாமல் செய்யும் சிவபூசையும், சிவதீக்ஷையில்லாமல் செய்யும் குருபூசையும், சிவதீக்ஷையில்லாமல் படிக்கும் எந்த தத்துவ சாஸ்திரமும், ஒரு பயனையும் கொடுப்பனவாகா. இப்படியிருக்க மக்களாகப் பிறந்தார் இந்த தீக்ஷையின் மகிமையையறியாமல் சமஸ்காரஹீனராகி இருப்பதைப் பார்க்க வருந்தவேண்டியதாகின்றது! அதனல் எல்லோரும் தீக்ஷையைச் செய்துகொண்டு தக்கவராகவேண்டுமென்று வேண்டுகின்றேன். ஆசாரியராயுள்ளவரும் தீக்ஷையின் பெருமையை நன்குணர்ந்து செய்யுமுறையைக் கையாண்டு தமது மடத்தைச் சேர்ந்த சீடர்களை வற்புறுத்தியாவது சிவதீக்ஷைசெய்துகொள்ளும்படிச்

செய்யவேண்டியது. இதுதான் ஆசாரியரின் கடமை. சீடர்களை நல்ல நிலைக்குக்கொண்டுவராத ஆசாரியர்களும், ஆசாரியரையடைந்து தீக்ஷையைப் பெற்றுக்கொள்ளாத சீடர்களும் செல்வங்களனைத்தையும் இழந்து தாழ்ந்த நிலைமையை அடைவார்களென்பது திண்ணம். சிலர் தீக்ஷையை விதிப்படி செய்யாது பிறருக்காகச் செய்துகொண்டோமென்று சொல்லுகின்றனர். அவர் தீக்ஷையினலறிந்து கொண்டவை என்னவென்று வினவப்படுகின்றபொழுது விடையளிக்க முடியாமல் விழிக்கின்றனர். தீக்ஷையைத் தனித்தனி செய்துகொள்ள முடியாவிட்டால் பலர் கூடி ஒரு குறிப்பிட்ட விடத்தில் விதிப்படி செய்துகொள்ளலாம். பொருட் செலவில் சுருங்கினுலும் கிரியைகளினும் பக்தியிலும் சுருங்குவதால் யாதும் பயனில்லையே! தீக்ஷையைச் செய்துகொண்ட வீரசைவர் முன்னிலும் ஆசாரியர்பால் புதிதுபுதிதான உண்மைகளையறிந்துகொண்டு இன்புறும் நிலைமையை அடைந்தவராதல் வேண்டுமென்பதே இக்கட்டுரையின் கருத்தாகும். இறைவனருளும் முன்னின்றருள்க.

ஆசாரமே ஆரோக்கிய சாதனம்.

(பிரபாப் பிரியன்)

மக்கட் பரப்பின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் ஆசாரமே சிறந்த சாதனமாகின்றது. ஆசாரத்தினுலேயே அறம், பொருள், இன்பம். வீடு என்னும் உறுதிப்பொருள் நான்குங் கிடைக்கின்றன. பண்டைக்காலத்திய முனிவரும், பெரியாரும் சதாசாரசீலராகி பரமேசுவரனது கருணைக்குப் பாத்திரராகி, உலகத்தில் என்றுந்தமது புகழை நாட்டி யாவராலுங் கொண்டாடப்பெற்று நிலவுகின்றனர். அதனுற்றுன் பகவதி சுருதிதேவியும் "**ஆசார: பரமோதர்ம:**" என்று இந்த ஆசாரத்தைப் பலமுறையாகக் கொண்டாடியிருக்கின்றனள். வீரசைவ மதத்தாபகராகிய ஸ்ரீஜகத்குரு இரேணுகாசாரியர் முனீந்திரராகிய அகத்திய முனிவர்க்கு வீரசைவ சித்தாந்தத்தை உபதேசிக்குங்கால் "**சதாசாரப்ரிய: சம்பு சதாசாரேணபூஜ்யதே, சாதாசாரம் விநாதஸ்யப்ரசாதோநைவஜாயதே**" என்று போதித்திருக்கின்றனர். அதனல் சிவபெருமான் சதாசாரத்தினுல் விருப்பமுள்ளவராகின்றுரென்றும், மனிதன் சதாசாரத்தினுலேயே உயர்ந்

தவனுகின்றனென்றும், சதாசாரமில்லாதவனுக்குச் சிவப்பிரசாதங் கிடைப்பதில்லையென்றும், அதுபற்றி அற முதலிய நான்கையும் அடையவேண்டிய மனிதன் சதாசாரத்தைக் கைப்பற்றவேண்டுமென் றும் அறியக்கிடக்கின்றது. அன்றியும் உலகமறிந்த பெரியாராகிய கௌதமரும் இந்த ஆசாரத்தின் பெருமையைப் பலவாறு புகழ்ந் துள்ளார்.

“ ஆசார : பரமோதர்ம ஆசார : பரமந்தனம், ஆசார : பரமாவித்யா ஆசார . பரமாகதி :, சதாசாரேண தேவத்வம் ருஷித்வஞ்சவரானனே, உபாகதா: குயோநித்வம் மநஷ்யாஸ் தத்விபர்யயே, ஜ்ஞானமாசாரஹீநேஷு ஸர்வதைவஸம நீவிதம், துஷ்ட சண்டாளபாண்டேஷு யதாபாகீரதீஜ லம்”

ஆசாரமே சிறந்த தருமம் என்றும், ஆசாரமே சிறந்த பொரு ளென்றும், ஆசாரமேசிறந்தபரம வித்தையென்றும், ஆசாரமே சிறந்த முத்தியென்றும், இந்த வுத்தமமான ஆசாரத்தினல் மனிதன் கடவுள் தன்மையை அடைகின்றனென்றும், ஆசாரத்திற் குறைந்த மனிதன் நாய் பன்றியின் பிறப்பிற்றாழ்வனென்றும், சண்டாளரது பாத்திரத்தி லிருப்பது தூய்மையான கங்கை நீராயினும் அந்நீர் பயன்படாதவாறு போல அநாசாரரிடத்தில் நிரம்பியுள்ள ஞானமும் பயனற்றதாகின் றது என்றும் போதித்திருக்கின்றனர். ஆசாரத்தின் மேன்மை இங் ஙனமிருப்ப இக்காலத்தில் ஆசாரத்தை மேற்கொள்பவர் சிலரே. பண்டைக்காலத்து மக்கள் ஆசாரமுடையராய் தர்ம கர்மங்களுக்குப் பாத்திரராயிருந்தனர். இக்காலத்திய மக்கள் ஆசாரத்தை அறவே ஒழிக்கப் பார்க்கின்றனர். இவர்கட்குத் தமது தர்மமும் வேண்டா; கர்மமும் வேண்டா ; ஆசாரியர் வேண்டா ; ஆசாரமும் வேண்டா ; தந்தையும் வேண்டா; தாயும் வேண்டா; ஆசாரத்தைப் போதிப்பவரே முதலில் வேண்டா என்னும் துறவு நிலை உணர்த்துவாரின்றியே உண் டாயிருக்கின்றது ! மேலேறுவார்க்குத் துணைபுரிவார் வேண்டுமே யன்றி கீழ்வீழ்வார்க்குத் துணைசெய்வார் வேண்டுவதில்லையே ! இன் னுமவர்க்கு அநாசாரத்தை உபதேசிக்கின்றவரே தந்தையுமாகின்ற னர் ; ஆசாரியரும் சுற்றத்தாருமாகின்றனர். பெரியோர் உலகப் பற்றை விடுத்ததனல் முத்தியை யடைகின்றனர் எனக்கேள்வியுற்று

இந்த அறியாமையிற் சிறந்த சிறியோரும் ஆசாரத்தை விடுத்து நரகத்தில் ஆழ்கின்றனர்! அந்தோ;

வீரசைவ தர்ம சாஸ்திரத்தில் பவிகளுடைய (இலிங்கதாரண தீக்ஷையில்லாதவருடைய) தூசியும் வீரசைவர்கள்மேல் படலாகாதென்னுங் கடினமான நியமம் விதித்திருக்க அதனைச் சிறிதுங் கருதாது இலிங்கதாரணமுடைய சிலர் மூடத்தனத்தாலும் கூட்டுறவினாலும் அச்சத்துடன் மறைவாகவும், சிலர் அச்சமின்றி வெளிப்படையாகவும் தீக்ஷா சமஸ்காரமில்லாத அந்நிய மதத்தினரது சிற்றுண்டிச் சாலை (காபி கிளப்பு) நுழைந்து, இட்டலி, காபி, உப்புமா கேசரி, ரவாதோசை முதலியவற்றையுண்டு சுவையொன்றையே நாடும் இழிந்த நாவிற்கு அடிமைப்பட்டவராய்த் தாமும் வீரசைவரென்றும், சமூகத்திற்கும் சமயத்திற்கும் பாடுபடுபவரென்றும் சொல்லித் திரிபவரைக் காண எவ்வளவு விசனிக்கத்தக்கதாகின்றது! கேவலம் நாவின் சுவையை ஒழிக்க முடியாதவரா பொருளாசையை விடுத்துப் பொது நலங்களைச் செய்பவராவர்? இந்த தர்மப் பிரஷ்டர் தாம் கெடுவதேயன்றி, தமது குடும்பத்துள்ள சிலர்களையுங் கெடுக்கின்றனர். அம்மட்டிலுமா சதாசாரரது மனையின்கண் சென்றும் அவருடன் பந்தியில் உட்கார்ந்து தின்றும் அவர் காத்துக்கொண்டிருக்கும் சிறிது ஆசாரத்தையுங் கெடுக்கின்றனர். இக்காலத்தில் இந்தச் சண்டாளருக்கு இடங்கொடுத்துப் பலர் கெடு வழியில் இறங்கவும் பார்க்கின்றனர். இதனைக் காலத்தின் சிறப்பென்போமா? அல்லது நாவிற்கடிமைப்பட்ட இவரை நரகத்திலாழ்த்தப் பார்க்கும் ஊழியின் வலியென்பேமா? இக்கெடு மதியினர் சமாஜத்தில் கால் வைப்பின் சமாஜந்தான் முன்னேற்றமடைவதெப்படி? அவர் உண்ணுமுணவு சிவப்பிரீதியாகுவதெப்படி? பொதுவாக நோக்குங்கால் சுகாதார நூலின்படியும் ஆசாரம் ஆரோக்கிய சாதகமல்லவா? பிறருடுத்த வுடையும் படுத்த படுக்கையும் நோயைத் தருமென்பார், பலர் வாயில் வைத்துண்ட எச்சில் பாத்திரமும் பற்றும் மலிந்து கிடக்கின்ற நோயின் பிறப்பிடமாகிய சிற்றுண்டிச்சாலையில் அழுக்குத் துணியும் அழுகிய கையும் ஊத்தை வாயும் ஒழுகிய புகையிலை யெச்சிலுமுடைய மாமிசபிண்டத்தின் கையாற் படைக்கக் களிப்புடன் உண்கின்றனரே! இதுவா இவர் கற்ற சுகாதார நூலின் பயன்? சிலர் உலகத்தில் புகழையோ பொருளையோ பதவியையோ பெறலா

மௌனவீண்களுக்கண்டு உண்ணத்தகாதவருடனிருந்துண்டு, ஒற்றுமை வழியிலிறங்கி உபகாரச் செயலில் முற்படுவதாக வஞ்சக நடிப்பில் நடிகரினுந் திறமையுடையராகின்றனர். அந்தோ இவரது மூதாதையரின் பெருமையும் இவரது சிறுமையும் இருந்தவாறென்னே ! இப்படிப்பட்ட இழிந்த செயலில் இறங்குதற்கு இவரது மனம் எங்ஙனந் துணிவுடைந்ததோ அறியேம் !

இப்படிப்பட்ட புண்ணியசாலிகளுக்குச் சதாசாரமுடையோர் ஏற்றவாறு புத்திமதிகளைப் புகட்டி, இழிந்த செயலினின்றும் மீட்பதற்குரிய முயற்சியைச் செய்யவேண்டுமென்று ஆசார வுலகம் எதிர்பார்க்கின்றது. இங்ஙனம் அநாசார வழியில் நடப்பவர் இவ்வுலகின் அற்ப சுகத்தை நாடும் நாட்டத்தை விடுத்துப் பரலோக சுகத்தை நாடுவதிலுங் கருத்தைச் செலுத்தி, பாபபுண்ணியங்களின் தர்மாதர்மங்களின் நிலையைத்தெரிந்து, தாம்எந்த மதத்தில் பிறந்தனரோ அந்தமதத்தின் கட்டளைப்படிக் கூறியுள்ள ஆசாரத்தின் உயர்வைத் தெரிந்துகொண்டு சதாசாரசீலராகிப் பரமேசுவரனுடைய கருணைக்குப் பாத்திரராகி இகபரசுகங்களிரண்டையும் அடைந்து செல்வமுடையவராக வேண்டுமென வேண்டுகின்றேம். கடவுளும் கருணைபுரிவாராக.

அட்டாவரணம்.

௧-வது குரு.

(திரு உருத்திரசாமி ஐயர் அவர்கள் தமிழ்ப்பண்டிதர், புலிசை.)

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனாகிய சிவபெருமான் உலகெலாம் உணர்ந்து ஓதி உய்யவே உருவங்கொண்டு அமைந்துளான். அவ்வுருவங்கள் பல. அவையனைத்தும் குரு லிங்கம் சங்கமம் எனும் மூன்றனுள் அடங்கும். அவற்றுள் முதன்மையாயதும் இலிங்க சங்கமங்களின் இயல்புகளை அறிந்து வழிபடற்கு ஏது ஆயதும் குரு வுருவேயாம்,

குரு, ஆசாரியன் என்பன ஒரு பொருட் சொற்கள். கு இழிவை ரு போக்குபவன். பிறப்பினை உண்டாக்கும் அஞ்ஞானமாகியஇழிவைத் தன் சிவஞானத்தால் ஒழிப்பவன் என்பது பொருள். இன்னும் குகாரம் குணாதீதம் ருகாரம் ரூபாதீதம். குணத்தைக் கடந்ததும்

ரூபத்தைக் கடந்ததும் ஆனபரம் பொருளே, குணமும் குறியுங்கொண்டு தோன்றி, குணங் குறியற்ற பொருளை உணர்த்துவோன் எனப் பொருள்படும்.

கூறருங் குணாதீதமே குகாரமாம் ருகாரம்
வேறிலங்கு ரூபாதீத மென்குவர் மேலோர்
தேறிடுங் குணாதீதமா மருவருள் செய்யு
மாறடைந்த வனியாரவன் குருவென மதிப்பாய்.

உண்மைச் சாத்திரங்களின் உறுதிப் பொருள்களை ஐயந்திரிபு நீங்கத் தெளிவுபெற விளக்குவோன் ஆசாரியன். அறிந்தவழி அரும்பொருளை அடைய சாதனமுகத்தால் ஆசரிக்கச்செய்பவனும், சீடர்கள் தன்னைக் கண்டு அந்நிலையின் வழுவாது நிற்க ஆசரிப்பவனும் எவனோ அவனே ஆசாரியன்.

அத்தகைய குருமார்கள் பலர் ஆவர். அவர்களெல்லாம் கிரியா குரு, ஞானகுரு என இருவகையின் உள்ளாவர். ஞானத்திற்குச் சாதனமாக விருப்பது கிரியை யாதலால் கிரியையினும் ஞானம் சிறந்தது. ஆகவே கிரியா குருவினும் ஞானகுரு மேம்பட்டவர்.

எவன்வாய்மொழி ஐயம் எனும் வனத்தினையழிக்க ஒள்ளிய பரசு (கோடரி) ஆக விளங்குகிறதோ அவன் ஞானசிகாமணியாம். எவன் தன் உபதேசமாகிய கண்ணாடியில் முத்தியாகிய விம்பத்தைக் காட்டுகிறானோ அவனே பிறவிக்கடலினின்றும் கரையேற்றுவிப்பவன். ஊனக்கண்களை மறைக்கும் புற இருளை ஓட்டும் வான்சூரியனைப்போல் ஞானக்கண்களை அநாதியே மறைக்கும் அக இருளாம் ஆணவத்தை யகற்றும் ஞானசூரியனே ஞானாசாரியன்.

பலபிறவிகள்தோறும் கிரியாகுரு உபதேசித்தவண்ணம் அநுட்டித்து முதிர்ந்த தவப்பெருக்கால், இதுகாறும் நுகர்ந்த இன்பமெல்லாம் துன்பத்திற்கு ஏதுவானவையே, அநித்தியமானவையே, பூரணமில்லாதவையே என்று ஓர் நல்லுணர்வு உதிக்கப்பெற்று, துன்பமில்லாததும், நித்தியமாயதும், பூரணமானதுமான இன்பம்யாது? அதனை அறிவிப்பவன் யாவன்? அவன் எங்குற்றனன் எங்குற்றனன் என எதிர்ப்பட்டோரை வினவி ஏக்கமுற்று, வறுமையுற்றோன் ஒருவன் அதனைப்போக்கக் கருணைநிரம்பிய பிரபுவைத்தேடிச்செல்வதுபோல

தீரா நோயினல் வருந்தும் ஒருவன் அதனைத் தீர்க்கும் மருத்துவனை நாடிச்சொல்வதுபோல, தலையில் தீப்பற்றிய வொருமகன் அதனைத் தணிக்க நீர்நிலையினை நாடி ஓடுவதுபோல, நள்ளிருளில் கானகத்தே வழிதப்ப நல்வழி அறிதற்கு சூரிய உதயத்தை எதிர்நோக்குபவன் போல பலவிடங்களிலும் அலைந்து திரிந்து வருந்தித் தேடுவான்.

தேடுவோனது பொய்நீங்கிய இடையறாத நல்லன்போடு கூடிய முயற்சியினை யறிபவனும், இவனது உயிர்க்கண்உற்ற ஆணவநோயின் திறத்தினை உள்ளிருந்தே உணர்ந்தவனும், தேகத்தை எடுக்காத கேவலாவத்தையினும் பிரியாது உடனிருந்து உதவிசெய்து காப்பவனும் ஆகிய இறைவன் கருணைகூர்ந்து, காந்து, சீவகருணை, சிவபத்தி, வைராக்கியம், பிரமஞானம் ஆகிய நான்கினையும் தமது பேருறுப்புக்களாகத்தாங்கி ஞானசாரியனாக வெளிப்பட்டு அவனை ஆளவருவான். அவனே ஒருமலத்தாராகிய விஞ்ஞானகலருக்கு உண்ணின்றே இன்பம் உணர்த்துவோன். அவனே இருமலமுடையராகிய பிரளயாகலருக்கு சதுர்புஜ காளகண்ட திரிநேத்திரத்தோடு வெளிப்பட்டு அருள்வோன், மும்மலத்தார்க்கும் சிவஞானம்தருவோன் இவனே. சூரியன் முன்னிலையின் அன்றி சூரிய காந்தக்கல்லில் அக்கினி தோன்றுமேல், சந்திரன் முன்னிலையின் அன்றி சந்திரகாந்தக்கல்லில் நீர் வெளிப்படுமேல், ஞானசாரியன் சந்நிதியின் அன்றி சீடனுக்குச் சிவஞானம் தோன்றும். சிவஞானத்திற்கு ஞானசாரியன் இன்றியமையாதவன்.

ஞானசாரியன் சீடனது உடலின் இலக்கணத்தையும், உடலில் உறையும் உயிரின் இலக்கணத்தையும் உணர்த்தி, உயிரினல் உடல் இயங்குவது போல் உயிர்க்குயிராய் விளங்கும் இறைவனல் உயிர் இயங்குந் தன்மையை அறிவித்து, உயிரினை இயக்கும் ஒப்பற்ற பொருளே இவ்விலிங்கம் என்று சுட்டிக்காட்டி ஆக்ஞா, உபமா, சுவஸ்திகாரோகணம், விபூதிப் பட்டம், கலசாபிஷேகம், லிங்காயதம், லிங்கசுவாயதம் ஆகிய தீக்ஷைசெய்து அவனது காதலத்து உய்த்து "இதனை நாடோறும் நேசித்துப் பூசி" என்று தருவதுடன், இவனுக்குள்ள தூலம் சூக்குமம் காரணம் எனும் தேகம் மூன்றினது இயல்புகளை எடுத்துரைத்து அம்மூன்று சரீரங்களிலும் சிவபெருமான் முறையே இட்டலிங்கமாகவும், பிராணலிங்கமாகவும். பாவலிங்கமாகவும் எழுந்தருளியிருக்கும் திறத்தினையும் காண்பித்தருள்வன்.

ஞானசாரியன் சீடனை நோக்கி "நீ அநுபவிக்கும் பொருள் எத் தன்மைத்தாயினும் அதனை உரு, சுவை, திருப்தி என முக்கூறு படுத்தித் தூலதேகத்தில் உறையும் இட்டலிங்கத்திற்குரூபத்தினையும், சூக்கும தேகத்தில் உறையும் பிராணலிங்கத்திற்குச் சுவையினையும், காரண தேகத்தில் உறையும் பாவலிங்கத்திற்குத் திருப்தியினையும் அர்ப்பித்து உண்ணுவையேல் இப் பிறப்பில் வரும் ஆகாமியம் எனும் வினை உனை அடையாது சிதையும். இன்னும் கரதல பீடத்தில் இனிது அமர்ந்துள இட்டலிங்கத்தில் நினது பார்வையினை இமைக்காமல் நிறுத்தின் நாடோறும் சிறிது சிறிதாக நின்போதம் அறவே கெட சிவபோதத்து அழுந்துவாய்" என்று அருளுடன் உபதேசிப்பான்.

உடறனி லுறையு முயிரினை யியக்கு
மொருபொரு ளிலிங்கம தாக
உயர் தருவேத மந்திரங் கிரியா
தீக்கையாற் கரதலத் துய்த்தே
விடயம்யா தென்றிங் கடையினு மதனை
விளம்புரு சுவைநிறை வாக்கி
மெய்யின்மூன் றதனி லுறைதரு மிட்ட
மேற்பிரா ணபாவலிங் கத்திற்
றிடமுட னர்ப்பித் துண்ணமேல் வினையுஞ்
சிதையுமென் றருளிய பின்பு
செங்கையி லிங்க கோளக மதனிற்
றிருட்டியு மிமைக்குத லின்றி
யடைவுடன் விழித்தே யிருந்துநின் போத
மகற்றிடென் றுரைத்தவா ரமுதே
யணிகிளர் கோவ னகரில்வா ழரசே
யாறுமா முகசிகா மணியே.

எவனுடைய திருமேனியைக் காண்டலே தெளிவை யுண்டாக்குமோ, எவனுடைய நாமம் செப்பலே தெளிவையுண்டாக்குமோ, எவனுடைய திருவார்த்தையைக் கேட்டலே தெளிவை யுண்டாக்குமோ, எவனுடைய உருவைச் சிந்தித்தலே ஞானத் தெளிவைத் தருமோ அவனே ஞானசாரியன். ஆதலால் அவனது திருமேனியைக் கண்டும், அவனது திருநாமம் செப்பியும் அவனது திருமொழியைக் கேட்டும், அவனது திருவுருவைச் சிந்தித்தும் உய்வோமாக.

வீரசைவ விசேட இலக்கணம்.

தீக்ஷா சம்பன்னரான வீரசைவர்கள் நாள்தோறும் இன்றியமையாது செய்யவேண்டிய சிவபூசை முதலிய நல்வினைகளில் மேற்கொள்ளவேண்டிய விசேட இலக்கணங்கள் வேதாகம விதிப்படி யாவரும் உணர்ந்து அனுட்டிக்கவேண்டி எழுதப்பெறுகின்றன. அறிஞர் ஆராய்ந்து தம்மக்கட்கு உணர்த்தி மேற்கொள்ளச் செய்வாராக.

"சிவார்ச்சாகர்மவிஜ்ஞேயம் பாஹ்யம் யாகாதி நோச்யதே" என்ற சித்தாந்த சிகாமணி வசன முறைப்படி வீரசைவர்களுக்கு சிவ பூஜாகர்மமே மேலானது; ஏனைய யாகாதி கர்மங்களெல்லாம் அழியும் பலன்களைத் தரத்தக்கனவாதலின் அவைகள் விடுக்கற்பாலன. அதனால், வீரசைவாசார சம்பன்னர்கள் குருவினால் கருணைகூர்ந்து கொடுக்கப்பெற்ற இஷ்டலிங்கத்தைத் தரித்துக் கொண்டதன்மேல்,

"பக்தாவேகமநாபூத்வா யாவஜ்ஜீவம் ப்ரதிஜ்ஞயா, அர்ச்சயேத் தம் மகாதேவம் ஆபங்நோபிஸதாபுத:" என்னுஞ் சிவதர்மப்பிரமாணத்திற்கேற்பத் தனக்கு மரணம் நேரும் வரையும் நித்திய சங்கல்பத்துடன் சிவார்ச்சனையைச் செய்யவேண்டும். சங்கல்பமாவது இன்ன காரியத்தை இன்ன பலனைக்கருதி இன்ன முறையில் செய்வேனென அந்தக்கரணங்கள் ஒருமிக்க உறுதிசெய்துகொள்வது; ஆதலின் சங்கல்பமின்றிய எந்த வினையும் பயனைத்தராது எனப்படுதலின் சங்கல்பஞ்செய்துகொண்டே சிவார்ச்சனை முதலியன தொடங்குதல்வேண்டும். வீரசைவர்கள் சிவபூஜையை எட்டு யாமங்களிலும் செய்வது உத்தமம். முடியாவிடின் காலை நண்பகல் மாலையாகிய முக்காலங்களிலாயினுஞ் செய்தல்வேண்டும். அதற்கும் இயலாதாயின் நண்பகல் மாலை இரண்டு வேளையினும் தவறாது செய்தே உண்ணவேண்டும்.

"ஸ்நாத்வாத்விவாரம் சிவமர்ச்சயிஷ்யந்யுஞ்சீத நோசிந்நரகம் பிரயாதி" இரண்டு காலங்களிலும் நீராடி, சிவபூஜையைமுடித்து உணவை உட்கொள்ளவேண்டும். நீராடாமல் சிவபூசையைச் செய்தவரும், சிவபூசையைச் செய்யாமல் உணவை யுண்போரும் நரகத்தையடைவர் எனக் கிரியாசாரத்தில் கூறப்பட்டிருப்பதாலும், பண்டிதாராத்திய சரித்திரத்தில் பிராணனுள்ளவரையும் பரசிவத்தைப் பூசிக்காமல் உணவை உண்ணலாகாது; அப்படி யுண்பவன் பாபரூபமான அன்னத்தை யுண்பவனாவான்; எவன் சிவபூசையின்றி யுண்ணுவனோ

அவன் புழுவையுண்டவன் ஆவன் எனக்கூறுவதாலும், வீரசைவன் சிவபூஜைக்குத் தடையுண்டானல் பிராணனையாவது விடவேண்டும்; சிரச்சேதமாவது செய்துகொள்ளவேண்டும்; சிவபூசையைச் செய்யாமல் உண்ணலாகாது என்று கூறியிருத்தலால், நீராடிய பின்னர் சிவபூசையை முடித்து இஷ்டலிங்கத்திற்கு நிவேதனமான அன்னத்தையே உண்ணவேண்டும். (தொடரும்.)

வீரசைவப் பெரியார்கட்கோர் – – – வேண்டுகோள். – – –

கனந்தங்கிய ஐயன்மீர்! நமது வீரசைவத்தின் ஏழு இதழ்களிலும் பத்திராசிரியர் அவர்கள் "காலத்தின் அருமையும் நமது கடமையும்" என்னும் தலைப்பின்கண் அழுந்திக் கிடக்கும் நமது மனவெழுச்சியை யெழுப்பப் பல ஆராய்ச்சியுடன் பல்வேறு காரணங் காட்டி எழுதியுள்ள கட்டுரையின் கருத்தை யாவரும் உணர்ந்திருப்பீர்கள். இந்நாட்டில் பல மரபினரும் பல வழியிலும் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். நம் மரபினர் மட்டின்னம் உறங்குதல் எவனே? 'வாழ்வு சிலகாலம் தாழ்வு சிலகாலம்' என்னும் பழமொழிக்குமாருக நம்மனேர்க்கு மட்டிலும் தாழ்வே தொடர்ந்து ஊன்றிவிட்டதோ என ஐயப்படுகின்றேன்! ஏனென்றல், பலர் தமக்கெனப் பல பத்திரிகைகளை வெளியிடுகின்றனர். பலமுறை பலவிடங்களில் கூட்டங் கூட்டுகின்றனர். பல சீர்திருத்தஞ் செய்கின்றனர். நாகரீகத்தில் முன்னேற்றமடைகின்றனர். நம்முடைய சங்கமோ வருடத்திற்கொரு முறை நடப்பது அரிதாயிருக்கின்றது. சமீபத்திற்றேன்றிய செங்குந்த மித்திரன் என்னும் பத்திரிகைக்கு 4000 சந்தாதாரர்களிருக்கின்றர்கள். நமது வீரசைவத்திற்கோ இன்னும் 1000 சந்தாதாரர்கள்கூடச் சேர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. 8-வது இதழிலும் சந்தாத் தொகை வரவில்லையெனக் காண மிகவும் விசனிக்கத்தக்கதாகின்றது! இன்னும் அதனை நமது நேயர் முற்றிலும் ஒரு மாத அளவிற்குள்ளாது படிக்கின்றனரோ எனவும் ஐயுறுகின்றனன். நம்மவரிற் சிலர் உலகமறியாமல் தம் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கின்றனர். சிலர் அன்று கண்டது அன்றேடே என வாழ்கின்றனர். சிலர் இன்று கழிந்தது நாளை ஈசனுளன் என்கின்றனர். இவ்வாறு ஞானிகளைப்போல் நடிக்கின்றனர். "காலம் விரும்பார் தொழில் விரும்பார் கன்மம் விரும்பாருடல் விரும்பார்" என்னுஞ் சித்தாந்தத்

தின் கருத்து இவர்களது சோம்பலின் அளவில் நின்றதுபோலும்! அந்தோ! இக்கருத்து உலகத்தை வெறுத்த நிராபாரர்க்கன்றே பொருந்தும். காலவியல்புக்கேற்ப தொழின் முயற்சியில் இறங்குதல் வேண்டும். இன்னும் ஒரு பெருங்குறை யிருக்கின்றது. அதாவது ஒவ்வொருவரும் தம்மைத் தாமே பெரியவரென மதித்துக்கொண்டு ஒற்றுமைப்படாதிருப்பது. இதனாலேயே கூட்டுறவினாலாய தொழில் விருத்தியையும் இன்பத்தையும் அடையாமலிருக்கின்றனர். தம்முடைய படிப்பையே பெரிதென எண்ணுவதொன்று. தம்முடைய செல்வத்தையே உயர்ந்ததெனக் கருதுவதொன்று. இக்குறை நேருவதற்குக் காரணம் உலக சஞ்சாரமில்லாமையேயன்றி வேறன்று. இனி ஒற்றுமையுடன் வருடத்திற்கொருமுறையாவது வெவ்வேறிடங்களில் சங்கங் கூட்டிப் பலருடன் கலந்து யின்புறும் வழியை நாட வேண்டுமென வேண்டுகின்றேன். **S. தியாகராஜய்யர்.**

வட நாட்டு நிகழ்ச்சி.

பரளிப்பிரகரணத்தின் தீர்மானம் வீரசைவர்க்கே வெற்றியைத்தந்தது.

உலகத்தில் பிரசித்திபெற்ற பனிரெண்டு ஜோதிர்மயலிங்கங்களில் 'பரளி' என்னும் திவ்வியதலத்திலுள்ள வ்ருஜநாத மகாலிங்கமும் ஒன்று. இந்த மகாலிங்கத்திற்கு வீரசைவர்களே தொன்றுதொட்டு வேதோக்த மந்திரங்களினால் பூஜைசெய்து வருகின்றார்கள். இவர்களிடத்துப் பொறாமைகொண்ட ஸ்மார்த்தர்களிற் சிலர் வீரசைவர்க்கு அதிகாரமில்லையென மூன்றுவருடமாகக் கோர்ட்டில் வழக்காடிவந்தார்கள். இந்தவழக்கு ஐதராபாத்துகோர்ட்டிலுள்ள மூன்று ஜட்ஜிகளால் விசாரிக்கப்பட்டு வீரசைவர்பக்கமாகவே தீர்மானஞ்செய்யப்பெற்றிருக்கிறது. அது கௌன்சிலர்களுடைய பார்வையிலும், கனந்தங்கிய நைஜாம் அவர்களுடைய பார்வையிலும் பாதுகாக்கப்பெறுகின்றது. இந்த ஆலயம் நல்லநிலைமையிலிருப்பது வீரசைவ சமாஜத்திற்கே கௌரவத்தைத்தருகின்றது. நியாயத்தை நிலைநாட்டிய நைஜாம்சர்க்காருக்கும், இதில் பெருமுயற்சியெடுத்துக்கொண்ட ஸ்வர்க்கவாசியான பாலமுகுந்தசாஹேபருக்கும் வீரசைவசமூகம் என்றும் நன்றிபாராட்டுதற்குரியது. இந்தவெற்றியில் வீரசைவரனைவரும் பெருமகிழ்ச்சியடைகின்றார்கள் என யாதகிரி வியாகரணதீர்த்த சந்திரசேகர சாஸ்திரியார் பஞ்சாசாரியப்பிரபாவில் (26—8—29) எழுதுகிறார்.

போயகுல மோடுசரண ரோடுமேவு சமயமும்
போன்றுலகம் விட்டமலனர்
பூசனைகோ ளரியநிர்ச் சஞ்சார முங்கொடிய
பொன்பெண்மண் ணாசைநெறியிற்
பாயமன மோடாத நிட்பிரா ணமுமெய்ம்முப்
பத்தாறு தத்துவமறப்
பகுதியோடு ணர்த்துதத் துவமுமிறை யஞ்சனீ
பாரென்னு மான்மிகமுமே
மேயசடு லிங்கமுட னுறங்க மாகுமோரு
மெய்யனுக் கிரகநிலையும்
விமலமுறு சச்சிதா னந்தசிவ மயமென்னு
மிக்கசத் தியசுத்தமு
மாயவெழு வகைநெறியி னுவியிடை யிலகுமா
னபிடேக மாடியருளே.
யறிவுற்றெ னங்கைமலர் சேறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

(இ - ள்) போயகுலமொடு - (கற்பிதமாகிய பல்வேறு வகைப்பட்ட) சாதிபேதங் கருதுதலின்மையுடன், — சரணரொடுமேவு - (அங்ஙனம் பேதமின்றி விளங்கும்) சிவசரணர்களோடு பொருந்தச் செய்தலாகிய, — சமயமும் - சமய தீக்ஷையும்;— பொன்று உலகம் விட்டு - அழியுமியல்புடைய தநு கரண புவன போகங்களாகிய வுலகப்பற்றை விட்டு,— அமலனர் பூசனை கொள் - (இயல்பாகவே) மலமின்றி விளங்கும் சிவபெருமானது பூசையையே (சஞ்சாரமாகக்) கொள்ளச் செய்தலாகிய,— அரிய நிர்ச்சஞ்சாரமும் - பெறுதற்கரிய நிர்ச் சஞ்சார தீக்ஷையும்; — கொடிய பொன் பெண் மண் ஆசை நெறியில் - (தங்கண் பற்றுடையாரைப் பிறவியின்கண் வீழ்த்தும்) கொடிய தன்மையுடைய பொன் பெண் மண் என்னும் மூன்றன் ஆசையாகிய பொய்க் நெறியின்கண்,— பாய மனம் ஓடாத - பரந்து சென்றலையுமியல்புடைய மனத்தை ஓடாதபடி தடுத்து நிலைபெறச் செய்வித்தலாகிய, — நிட்பிராணமும் - நிட்பிராண தீக்ஷையும்;— மெய்முப்பத்தாறு தத்துவம் அற - உண்மையான முப்பத்தாறு தத்துவங்களும் நீங்க, — பகுதியொடு உணர்த்து - அவற்றின் பாகுபாட்டுடன் விளக்கிக் காட்டும், — தத்துவமும் - தத்துவ தீக்ஷையும்,

— இறை நீ அஞ்சல் பார் என்னும் - தத்துவங் கடந்த இறைவரா கிய அந்த சுயம்புலிங்கமே நீ அஞ்சாது பார்த்தறிதி என்று காட்டும், — ஆன்மிகமும் - அத்தியாத்மீக தீக்ஷையும், — மேயசடுலிங்கமுடன் ஆறு அங்கம் ஆகும் - இங்ஙனம் பொருந்திய பரசிவமே ஆசாரலிங்க மாதிய ஆறுலிங்கமாயும், பக்தன் முதலாய ஆறு அங்கமாயும் இருக்கு மென்றுணர்த்துதலாகிய, — ஒரு மெய் அனுக்கிரக நிலையும் - ஒப் பற்ற உண்மையான அனுக்கிரக தீக்ஷையும், — விமலம் உறு சச்சி தானந்த சிவமயம் என்னும் - மலமின்மை பொருந்திய சச்சிதானந்த பிரம்மமே லிங்காங்கசையோகமாக இருந்ததென்று அறிவிக்கும், — மிக்க சத்திய சுத்தமும் - சிறந்த சத்திய சுத்த வித்தியா தீக்ஷையும், — ஆய எழுவகை நெறியின் - ஆகிய இவ்வெழுவகை தீக்ஷா நெறி யினால், — ஆவியிடை இலகும் அரன் - இவ்வேழையும் பெற்ற வீர விசேடனுடைய ஆன்மாவாகிய பிராணனிடத்தில் பிரகாசிக்கும் அரனே! — அபிடேகம் ஆடியருள் - யான் செய்யும் அபிடேகத்தை ஏற்றருள்க என்றபடி. 'அறிவுற்று......அபிடேகமாடியருள்' என்ற தற்கு முன்னருரைத்தாங் குரைத்துக்கொள்க.

ஆசிரியர் இத்திரு விருத்தத்துள் வீரவிசேடருக்குச் செய்யப் பெறும் பிராணலிங்க தீக்ஷை ஏழையும் உணர்த்தினரென்க. அவை யாவன, — சமய தீக்ஷை, நிர்ச்சஞ்சார தீக்ஷை, நிட்பிராண தீக்ஷை, தத்துவ தீக்ஷை, அத்தியான்மீக தீக்ஷை, அனுக்கிரக தீக்ஷை, சத்திய சுத்த வித்தியா தீக்ஷை என்பன.

உணர்த்து தத்துவம், பார் என்னு மான்மிகம், சிவமயமென்னும் சத்தியசுத்தம் என மூன்றிடத்துப் பிறவினையாகக் கூறியிருத்தலானும் அதுவே பொருந்துமாதலானும் ஏனைய நான்கிடத்தும் பிறவினை யாகவே பொருள் கூறப்பட்டது.

போயகுலம் - குலப்பற்றின்மை. "கைகமழ் நறிய கறியொடுப டூஉ மென்மை வெள்ளடிசி லின்மைமாந்தி, விலைவரம்பறியாமென்று கிலின்மை நாடொறுமுடுத்து, பூண்டன தின்மைக் காண்டகப் புனைந்து, செஞ்சாந்தின்மை பூசி" எனப் பிறண்டும் எதிர்மறைப் பொருள்படக் கூறுவர். (எ)

சடுலிங்கம் :— ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிர சாத லிங்கம், மகாலிங்கம் என்பன.

ஆறங்கம் :— பக்தன், மாகேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கி யன் என்பன.

கிடைத்தசிவ லிங்கமன் றுணராத வேகாக்
கிரசித்த மென்னும்விரதம்
கெடாததிட விரதம்விட யங்கள்சிவ னுக்குதவு
கின்றவிந் திரியார்ப்பிதம்
உடற்றியுயிர் கொன்றிடா நின்றிடு மகிஞ்சைசிவ
னுண்மைகொ ளிலிங்கநிசமே
யுயர்சிவத் துளமடங் குறுமனோ லயமதனி
லொன்றாகி நின்றுபேதம்
விடுத்தலறு சத்தியோன் முத்தியேனு மிவையேழு
மிக்ககுரு வருள்புரியவே,
மேவலரு மெய்ஞ்ஞான பாவநிலை மேவியிடும்
வேதமுடி யாவுமுணரா
தடுத்தமன மொழியுடற் கப்புறப் பமேமல
னபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் சேறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

(இ - ள்) கிடைத்த சிவலிங்கம் அன்று - (ஆசாரியரருளால்) கிடைக்கப் பெற்றுக்கரதலத்தில் எழுந்தருளியுள்ள இஷ்டலிங்கத்தை யன்றி,— உணராத - (வேறொரு தெய்வத்தையும்) நாடாமலிருப்ப தாகிய,—விரதம் என்னும் - விரதம் பூண்டு அவ்விலிங்கவுண்மையை இடைவிடாது நோக்குதலென்னும்,— ஏகாக்கிரசித்தம் - ஏகாக்கிர சித்த தீக்ஷையும்,— கெடாத திடவிரதம் - இவ்வாறு மேற்கொண்ட விரத நியமங்களை உடலுள்ளவரையும் கெடாது பாதுகாத்தலாகிய திடவிரத தீக்ஷையும்,—விடயங்கள் சிவனுக்கு உதவுகின்ற - பஞ்சேந் திரியங்களுக்குப் புலனாகின்ற விடயங்களனைத்தையும் சிவபெருமா னுக்கேயுரியன வாகுகவெனக் கொடுக்கின்ற, — இந்திரியார்ப்பிதம் - இந்திரியார்ப்பித தீக்ஷையும், — உடற்றி உயிர் கொன்றிடா - (கார ணம்பற்றியாயினும், அசதியினாலாயினும்) கோபித்துப் பிறவுயிரைக் கொல்லுதலும், கொல்வித்தலுஞ் செய்யாது, — நின்றிடும் - (அகிஞ் சையென்னும் அருள் நிலையில்) ஊன்றி நிற்றலாகிய, — அகிஞ்சை - அயிமிசா தீக்ஷையும்,—சிவன் உண்மை கொள் இலிங்கநிசம்- (தோற் றமும் ஒடுக்கமுமில்லாத) சிவன்றானென்றறிவதாகிய இலிங்கநிசு

தீக்ஷையும்,— உயர் சிவத்து உளம் அடங்குறும் மனோலயம்-உயர்ந்த அச்சிவலிங்கத்தின்கண் பாவனையில் லயித்து மனந்திரும்பாதிருக்கின்ற சமாதியாகிய மனோலய தீக்ஷையும், — அதனில் ஒன்றுகி நின்று - அச்சிவலிங்கத்தின்கண் இலிங்கமுந் தானும் இரண்டறக் கலந்து நின்று,— பேதம் விடுத்தல் உறும் - பேத பாவனையைவிடுத்து அத்துவிதமாகக் கலந்து ஐக்கிய நிலையைப் பொருந்தும், — சத்தியோன் முத்தி - சத்தியோன் முத்தி தீக்ஷையும், — எனும் இவை ஏழும் - என்று ஆகமங்களிற் கூறப்படும் இந்த எழுவகை தீக்ஷையையும்,—மிக்க குரு அருள்புரிய - சிறந்த ஞானசாரியர் செய்தருள,— மேவல் அரும் - அடைதற்கரிய, — மெய்ஞ்ஞான பாவநிலைமேவியிடும் - (காரண தனுவில்) மெய்ஞ்ஞானமாகிய பாவலிங்க நிலையைப் பொருந்தியிருக்கும்,— வேதமுடியாவும் உணராது - நான்கு வேதங்களின் முடிபாகிய உபநிடதங்களனைத்தாலும் உணரப்படாமல், — அடுத்த மனம் மொழி உடற்கு - தொடர்புற்ற மனம் வாக்குக் காயங்களுக்கு, — அப்புறப்படும் அமலன் - அப்பாற்பட்டு விளங்கும் நின்மலனாகிய இறைவனே! — அபிடேகம் ஆடியருள் - அபிடேகமாடியருள்வீராக என்றபடி, —'அறிவுற்று......ஆடியருள்' என்றதற்கு முன்னருரைத்தாங்குரைக்க.

'அன்றி' என்னும் வினையெச்சத்தின் இகரம் செய்யுளின்கண் உகரமாயிற்று. பாவநிலை மேவியிடும் உணரப்படாமல் அப்புறப்படும் அமலன் எனக்கொண்டு முடிக்க.

ஆசிரியர் வீரநிராபாரருக்குக் காரணதனுவின்கண் செய்யப்பெறும் பாவலிங்க தீக்கையேழையும் இதன்கண் கூறினாரயிற்று. அவை,—1. ஏகாக்கிரசித்தம், 2. திடவிரதம், 3. இந்திரியார்ப்பிதம், 4. அகிஞ்சை, 5. இலிங்கநிசம், 6. மனோலயம், 7. சத்தியோன்முத்தி என்பன. வீரநிராபாரம் பரம், சரம், சுயம் என மூவகைப்படும். பரமாவது மூவகை தீக்கையும் சங்கம தீக்கையும் பஞ்ச முத்திரையும் பெற்றுத் திருவோடேந்தி பிச்சையேற்றுண்டு கானில் வசிப்பது. சரமாவது மேற்கண்ட முறைப்படி ஆசாரியாபிடேகம் பெற்று தீக்ஷை முதலியன செய்தற்கு அதிகாரம் பெற்றுச்சரித்தல். சுயம் ஒருவர் கட்டிக்கொடுத்த மடத்திற்றங்கி சமயாசாரம் விடாது அடியார்க்குபசரித்திருத்தல்.

(அ)

உலகத்திற் பெரிய நகரம் ⁘ ⁘ ⁘ ⁘ ⁘ ⁘ லண்டன்மா நகரமே.

நமது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தலைநகரமாக விளங்குவது லண்டன்மா நகரமென அறியாதார் யாருமிலர். அது 699 சதுரமைல் பரப்புடையது. (ஏறக்குறைய முசிரி தாலூகாவின் பரப்பையே ஒத்ததென்னலாம்) அதன் ஜனத்தொகை 7252963. அங்க நகரத்தில் 10 சதுரமைல் உலாவுதற்குரிய பொதுத் தோட்டமாகவிருக்கின்றது. அங்கு 609 ஏகர் அளவில் சமாதி செய்யுமிடமிருக்கிறது. அதன் காப்பிற்கு 22137 போலீஸார் இருக்கின்றார்கள். அதனைப் பரிபாலிப்பதற்கு ஒரு நகர பரிபாலன சபையும், 28 கிளைச்சபைகளும் இருக்கின்றன. அந்நகரத்திலிருந்தே பாரளிமன்றத்திற்கு 61 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பெறுகிறார்களாம். அங்கு நாள்தோறும் சுமார் 361 பிறப்பும், 66 இறப்பும் நடக்கின்றனவாம். அங்கு 2 லக்ஷம் வெளி நாட்டார்கள் நிலையான குடியிருக்கிறார்களாம். வருடத்தில் வைத்திய சம்பந்தமாக 8 லக்ஷம் பவுன் செலவாகின்றன. அந்நகரத்தில் மட்டிலும் 1056 ஆரம்ப பாடசாலைகளிருக்கின்றன; அவற்றில் 8 லக்ஷம் மாணவர்கள் பயில்கின்றார்களாம். 626 ரயில்வே ஸ்டேஷன்களிருக்கின்றன. 11000 வாடகை மோட்டாரும் உள்ளன. ஆனால் 300000 பேர் ஒரறைவாசிகளாகவும், 2000 பேர்களே வீடில்லாதவர்களாயுமிருக்கின்றார்கள். சுருங்கக்கூறின் இந்நகரத்தின் காட்சி புலவர்களின் உயர்வுநவிற்சியணிக்கும் மேற்பட்டதென்னலாம்.

உலகிற் பெரியதோர் செல்வச் சீமான்.

ஜான்டேவிசன் - ராக்பெல்லர்.

இவர், அமரிக்காக் கண்டத்தில் நியூபார்க்கில் ரிச்சுபோர்டு என்னுமிடத்தில் 1839 ஜூலை 8-உ பிறந்தவர். இவர்க்கு சென்ற வாரம 90-ஆம் ஆண்டு நிறைவு கொண்டாடப்பெற்றது. இவர் 1913-லிருந்து உலகத்திலுள்ள மக்களனைவரும் முன்னேறும் பொருட்டு கல்வி சம்பந்தமாகப் பெரும் பொருள் செலவிட்டு வருகின்றார். சென்ற ஆண்டில் 210 லக்ஷம் டாலர் கல்வி சம்பந்தமாகச் செலவு செய்திருக்கின்றனர். இது வருட வருமானத்தில் ஒரு சிறு பகுதியே, இவர் இளமையில் 2 ஆயிரம் டாலரை மூலதனமாக வைத்துக்கொண்டு எண்ணெய் வியாபாரஞ் செய்யத் தொடங்கி இப்பொழுது உலகில் எண்ணெய்க்கு அரசரென்றும், ஒப்பற்றசெல்வரென்றும் விளங்குகின்றார். இவரது முயற்சி பெரிதும் போற்றற்பாலதே.

சந்தாநேயர்கட்கு :—

கனந்தங்கிய ஐயன்மீர் !

9-வது இதழும் வெளிவந்துலவுவதாயிற்று. மகா சங்கத்தின் உறுப்பினராகவுள்ள சந்தா நேயர்களே சந்தாவை அனுப்பாமலிருக்கின்றார்கள். அவர்கள் பெயரைக் குறிப்பிட நாணுகின்றேன். பத்திரிகை நடத்துவதில் பல பொறுப்புண்டென்பதை எண்ணுதல் வேண்டும். 8 மாதம் பத்திரிகைப் பெறுவதில் கௌரவச் சந்தாதாரராக இருந்தவரிற் சிலர் இப்பொழுது V. P. யைத்திருப்பியும் விடுத்தனர். மணியார்டர் செய்யாதவர்களுக்கு இத்துடன் நிறுத்தப்பெறும். மேல் வட்டகையில் பெரும்பாலும் வசூலாய்விட்டது. மற்றையோர் அயர்ந்திருக்கின்றனர். கடிதம் எழுதுவோர் தங்கள் சந்தா நெம்பரை குறிப்பிடவும். வேண்டுவோர் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளுதல்வேண்டும். பணமனுப்பாத சந்தா நேயர்கள் தங்கள் கவனத்தை இம்முறையேனும் இதன்கண் திருப்புவாராக.

பத்திராசிரியர்.

நன்கொடை.

சென்ற மாதத்தில் முசிரி தாலூகா திருத்தலையூர் திருவாளர் இலிங்கையர் அவர்கள் புதல்வி ருது ஸ்நான காலத்தில் மகா சங்கத்திற்கு ஒதிக்கொடுத்தது ரூ. 1 இம்மாதத்தில் முசிரி தாலூகா த. புத்தூர் திருவாளர் V. சோமசுந்தரய்யர் அவர்கள் தம் புதல்வி ருதுஸ்நான காலத்தில் மகா சங்கத்திற்கு ஒதிக்கொடுத்தது ரூ. 1. இவர்கள் சங்கத்தாரின் நன்றியறிதற்குரியவராகின்றார்கள்.

சந்தா விவரம்,

ஆயுட் சந்தா	ரூ.	...	25–0–0
வருட சந்தா	,,	...	2–0–0
மாணவர்கட்கு	,,	...	1–8–0
தனியிதழ்	,,	...	0–4–0